## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.05.2015 முதல் 31.05.2015 வரை)
**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்இ ஆடுதுறை – 612 101**

போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881


==================================================================

**தேதி 26.05.15**

### கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (22.05.15 - 25.05.15)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 35-37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 28-29 |
| மேக ஶீட்டம் | 3 |
| ஈரப்பதம் (%) | 71-72 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 4 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 27,05,15 | தேதி-2 28,05,15 | தேதி-3 29,05,15 | தேதி-4 30,05,15 | தேதி-5 31,05,15 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 38 | 38 | 37 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 29 | 29 | 28 | 28 | 28 |
| மேக ஶீட்டம் | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (%) | 55-70 | 55-70 | 58-72 | 58-72 | 58-72 |
| காற்றின் வேகம் (கி.மீ,மணிக்கு) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

- 27.05.15 முதல் 31.05.15 வரை வானம் சற்று மேகஶீட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

**வேளாண் அறிவுரைகள்**

**முக்கிய பயிர்கள் நெல்இ கரும்பு வாழை மற்றும் பருத்தி**

**நெல்தரிசு பருத்தி காய்பிடிக்கும் பருவம் ? எள் காய்பிடிக்கும் பருவம் ? நெல் நாற்றங்கால் தயார்செய்தல்**

- குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36 ? ஆடுதுறை 43 ? ஆடுதுறை 45 மற்றும் கோ 51 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதை நேர்த்தி செய்வது அவசியம். நெல் விதைகளை கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் ஶீலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும்.

- கோடை நெற்பயிரில் தூர் கட்டும் பருவத்தில்இ 1 ஏக்கருக்குத் தழைச்சத்து உரமான 25 கிலோ யூரியாவையும்இ சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.

- சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் 200 கிராம் , ஏக்கர் அல்லது கார்பென்டெசிம் 200 கிராம் , ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக கோடை நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி. மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**